**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**அசல் வழக்கு எண். 75/2019**

வாக்குமூலம்..வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராதாகிருஷ்ணன் | ஜாதி | |
| த/பெ. | முத்தையா | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 72 /2024 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 12.11.2024 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

7. ஆறுமுகத்தின் அப்பா இந்தியா வந்து தான் இறந்தார். ஆறுமுகத்தின் அப்பா இந்தியாவிற்கு எந்த வருடம் வந்தார் என்றால் ஞாபகமில்லை. ஆறுமுகத்தின் தகப்பனார் இந்தியா வருவதற்கு முன்பே அரசு சொத்துக்களுக்கு பட்டா கொடுத்துவிட்டது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. ஆறுமுகம் இந்தியா வருவதற்கு முன்பே எங்கள் சொத்துக்களுக்கு பட்டா வந்துவிட்டது என்றால் சரிதான். பாலையாவின் தகப்பனார் காளிமுத்து பெயரிலும் சொத்துக்களுக்கு பட்டா வந்துவிட்டதா என்றால் வந்துவிட்டது. தாவா சொத்து பொறுத்து வரவில்லை. வேறு சொத்துக்களுக்கு வந்தது. தாவா சொத்துக்களை பொறுத்து கூட்டுப்பட்டா ஏற்படாமல் போய்விட்டது என்றால் சரியல்ல. புல எண். 168/4 மற்றும் 168/5 க்கு என் தகப்பனார் முத்தையா பெயரில் தான் பட்டா இருந்தது என்றால் சரிதான். காளிமுத்து என் தகப்பனார் உடன் தான் இருந்தார்.

8. செட்டில்மெண்ட் காலத்தில் காளிமுத்து பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றாலும், எனது தகப்பனார் முத்தையா பெயரில் மட்டும்தான் பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான். என் தகப்பனார் பெயரில் தனிப்பட்ட முறையில் பட்டா ஏற்படவில்லை என்றாலும், குடும்பத்தின் மூத்த உறுப்பினர் என்ற அடிப்படையில் தான் பட்டா ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. ஆறுமுகத்தின் தகப்பனார் இலங்கையில் இருந்து வந்த பிறகு புல எண். 168/4 ல் வீடு கட்டி குடியிருந்தார் என்றால் சரியல்ல. மேற்படி புல எண்ணில் ஆறுமுகத்தின் தகப்பனார் தாயகம் திரும்பியோர் நல திட்டத்தின் அடிப்படையில் மேற்படி சொத்தை அடமானம் வைத்து கடன் வாங்கி வீடு கட்டியிருக்கிறார் என்றால் சரியல்ல. சிறிது நாட்களுக்கு பிறகு எனது தகப்பனார் முத்தையா ஆறுமுகத்தின் தகப்பனார் கருப்பையா மற்றும் காளிமுத்து ஆகியோருக்கு இடையே தாவா சொத்து பொறுத்து பாகப்பிரிவினை

ஏற்பட்டது என்றால் சரியல்ல.

9. மேற்படி பாகப்பிரிவினையில் ஆறுமுகத்தின் தகப்பனார் கருப்பையாவிற்கு புல எண் 168/5 ல் கீழ்புறத்தின் தென்புறத்தில் 35 செண்ட் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் முத்தையாவிற்கு புல எண். 168/4 ல் 55 செண்ட் இடம் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. காளிமுத்துவிற்கு புல எண். 168/4 ல் 54 செண்ட்-ம் புல எண். 168/5 ல் 16 செண்ட்-ம் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு பாகப்பிரிவினை ஏற்பட்ட பிறகு மேற்சொன்ன அடமான கடன் வாங்கி புல எண். 168/4 ல் கட்டிய வீட்டை எங்கள் வசம் ஒப்படைத்துவிட்டு கருப்பையா புல எண். 168/5 ல் அவருக்கு ஒதுக்கப்பட்ட 35 செண்டில் புதிதாக வீடு கட்டிக்கொண்டார் என்றால் சரியல்ல. அதற்கு பின்பு தான் நில உடைமை மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைக்கு வந்தது என்றால் சரிதான். நில உடைமை மேம்பாட்டு திட்டத்தில் புல எண். 168/4A என் தகப்பனார் பெயருக்கு பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான். அதேபோல் ஆறுமுகத்தின் தகப்பனார் கருப்பையாவிற்கு புல எண். 168/5B க்கு பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல.

10. அதேபோல் காளிமுத்துவிற்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு புல எண். 168/5A மற்றும் 168/4B ஆகிய புல எண்களுக்கு நில உடைமை மேம்பாட்டு திட்டத்தில் பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. புல எண். 168/5A ல் ஆறுமுகம் வீடு கட்டி குடியிருந்தாரா என்றால் குடியிருந்து வழக்கிற்கு பிறகு வேறு இடத்திற்கு போய்விட்டார். தற்போது மேற்படி சொத்து எங்கள் அனுபவத்தில் இருக்கிறது. மேற்படி வீட்டில் கண்காணிப்பு கேமரா ஆறுமுகம் வைத்தாரா என்றால் வைத்தார். மேற்கண்ட கண்காணிப்பு கேமரா வைத்த பிறகு தான் நான் ஆறுமுகத்தை தொந்தரவு செய்வதை நிறுத்தினேன் என்றால் சரியல்ல. பழைய புல எண். 168/5 ல் கண்ட 25 செண்டை புயல் நிவாரண கடனை அடைப்பதற்காக காளிமுத்துவும், முத்தையாவும் 18.11.1960 ல் காளிமுத்து மனைவி ராக்கமாளுக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு கிரையம் கொடுத்த சொத்தை 10.10.1969 ல் பகீர் முகமது ராவுத்தர் மகன் காஜா மைதீனுக்கு அவரது தாயார் சையது பீவியை காப்பாளராக கண்டு கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. ஆனால் பட்டா தவறுதலாக பீர் முகமது பெயரில் ஏற்பட்டு விட்டது. மேற்கண்ட கிரையங்கள் தொடர்பாக நான் வில்லங்க சான்று பெற்று பார்த்தேனா என்றால் வில்லங்க சான்று எடுத்து பார்த்து அவர்கள் என் பெயருக்கு விடுதலை ஆவணம் எழுதி கொடுத்துவிட்டார்கள்.

11. என்னால் மேற்கண்ட விடுதலை ஆவணத்தை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. மேற்கண்ட கிரையங்கள் ஏற்பட்டது தொடர்பாக எந்த விவரமும் பிரதிவாதிக்கு அவரது தந்தைக்கும் தெரியாது என்றால் சரியல்ல. புல எண். 168/5B பொறுத்து பட்டா ஏற்பட்டதை பகீர் முகமது வகையறா ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நில உடைமை மேம்பாட்டு திட்டத்தில் பிரதிவாதி தந்தை பெயரில் தனிபட்டா ஏற்பட்டது

என்றால் சரியல்ல. தாவா சொத்து தொடர்பாக கோட்டாட்சியர் முன்பு நடந்த வழக்கில் கருப்பையாவை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவருக்கு தாவா சொத்திற்கு சம்மந்தமில்லை என்பதால் சேர்க்கவில்லை. கருப்பையா பெயரில் பட்டா இருந்தும் அவரை மேற்படி வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் அதில் ஏற்பட்ட உத்தரவுகள் கருப்பையாவை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

12. பிரதிவாதியின் தந்தை கருப்பையாவிற்கு பொன்னம்பலம், சுப்பையா, ஆறுமுகம், லெட்சுமணன், கிருஷ்ணன் என 5 பேர் வாரிசுகளா என்றால் தெரியாது. கருப்பையாவிற்கு எத்தனை வாரிசுகள் என்று எனக்கு தெரியும் என்றால் எனக்கு ஆறுமுகத்தை பற்றி மட்டும் தான் தெரியும். எனக்கு மற்ற வாரிசுகள் பற்றி நன்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக ஆறுமுகம் பற்றி மட்டும் தான் தெரியும் என்று சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. ஆறுமுகத்தின் தகப்பனார் கருப்பையா இறந்து எத்தனை வருடம் இருக்கும் என்றால் சுமார் 10 வருடம் இருக்கும். ஏற்கெனவே நடந்த அசல் வழக்கு எண். 57/2005 வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே கருப்பையா இறந்துவிட்டார் என்றால் சரிதான். கருப்யை இறந்தபிறகும் வழக்கு சொத்தில் உள்ள வீட்டில் ஆறுமுகம் தொடர்ந்து குடியிருந்து வந்து குப்பை குழி அமைத்து ஆடு, மாடு கட்டி அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. வழக்கு புல எண். சொத்திற்கு பிரதிவாதியின் தந்தைக்கோ பிரதிவாதிக்கோ எந்தவித அறிவிப்பும் அனுப்பாமல் பட்டா கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.

13. பட்டா மாற்றியது தவறானது அந்த சொத்து எங்களுக்கு சொந்தமானது என்று பாலையா 27.12.2004 ல் அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி அறிவிப்பிற்கு பின்னால் தான் 57/2005 என்ற வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கும் வழக்கு சொத்தில் உள்ள எனது உரிமையை மறுத்து தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து பிரதிவாதி பல பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் செய்து வருவதால் தாவா வழக்கு பரிகாரம் காலவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் குடியிருந்து பிரதிவாதியின் தந்தை கருப்பையா இறந்ததால் தாவா வழக்கின் பிரதிவாதியை தவிர உள்ள கருப்பையாவின இதர வாரிசுகளை தரப்பினராக சேர்க்காததால் தாவா வழக்கு அத்தியாவசிய தரப்பினரை சேர்க்காத தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்குசொத்து தொடர்பாக ஏற்பட்ட வருவாய் துறை நடவடிக்கையில் என் தகப்பனார் முத்தையா அம்பலம் காஜா மைதீன் மற்றும் அப்துல் சித்திக் வாரிசுகள் சேர்ந்து ஒரு ராஜினாமா கடிதம் எழுதி கொடுத்தார்கள் என்றும் அதில் காளிமுத்துவின் வாரிசுகளான பாலையா, ஆத்மநாதன், சுப்பிரமணியன் மற்றும் மேற்படி நபர்களின் தாயார் ராக்கம்மாள் ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்துள்ளார்கள் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளது தவறு என்றல் சரியல்ல. காளிமுத்துவின் வாரிசுகள் அனைவரும்

தரப்பினராக இருந்து கையெபத்து போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளார்கள். மேற்படி ராஜினாமாவை பிரதிவாதியோ, அவரது தந்தையாரோ எந்தவித கையெழுத்தும் போடவில்லை என்றால் சரியல்ல.

14. காளிமுத்துவின் வாரிசு பாலையா புல எண். 168/4B ல் வீடுகட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அது நாங்கள் பாகமாக கொடுக்கவில்லை, இனாமாக கொடுத்தோம். நாங்கள் பாகமாக கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. அவ்வாறு இனாமாக கொடுத்ததற்கு என் தகப்பனார் ஆவணம் எழுதி கொடுத்தாரா என்றால் ஆவணம் எழுதி கொடுக்கவில்லை வழக்குரையில் வழக்கு சொத்துக்கள் பொது குடும்ப சொத்துக்கள் என்று சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தந்தை வழக்கு சொத்தில் 51 செண்ட் அனுபவம் செய்து வருவதாக சொல்வது தவறு என்று நான் கட்சி செய்து இருப்பது பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாவா சொத்தை விட்டு காலி செய்து போயிருந்தால் தாவா வழக்கு போட வேண்டிய அவசியமில்லை என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முத்தையா அம்பலத்தின் தாயார் குப்பம்மாள் என்றால் சரிதான். குப்பம்மாளுக்கு உடன் பிறந்தோர் யாரும் இல்லை.

15. அதனால் குப்பம்மாளின் சொத்தக்கள் முத்தையா மற்றும் அவரது சகோதரர்களுக்கு கிடைத்தது என்றால் சரிதான். குப்பம்மாளின்சொத்துக்கள் உள்ள கிராமம் மேல்மங்களம் ஆகும். மேல்மங்களம் சொத்துககளை என் தகப்பனாரும் அவரது சகோதரர்களும் சேர்ந்து பல நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள். குப்பம்மாளின் சொத்தக்களை தவிர எங்கள் குடும்பத்திற்கு மேல் மங்களம் கிராமத்தில் வேறு சொத்துக்கள் கிடையாது என்றால் சரிதான். குப்பம்மாள் தான் மேல்மங்களம் கிராமத்தை சேர்ந்தவர் என்றும் எனது தந்தை வழி தாத்தா கருப்பன் இரத்தினக்கோட்டை கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு இரததினக்கோட்டை பூர்வீக கிராமம் என்றாலும், இரத்தினக்கோட்டையில் உள்ள சொத்துக்கள் என் தகப்பனாருக்கு பூர்வீக சொத்துக்கள் என்றால் சரியல்ல. அதனால் வழக்கில் நான்கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும், எனது அனுமதியின் பேரில் பிரதிவாதி வழக்கு சொத்தை வசித்து வருவதாக சொல்வது உண்மை கிடையாது என்றால் சரியல்ல.

16. கருப்பையா இறந்தபிறகும் அவரது வாரிசுகள் குடியிருந்து காலி செய்ய மறுக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.